# பணி நியமன ஆணை வழங்கும் விழா - 2023

தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பணி நியமன ஆணை வழங்கும் விழா 28.7.2023 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் உறவின்முறை பெரியோர்கள் கலந்து கொண்டு 81 இளம் பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணையை வழங்கினார்கள். இதில் மாணவர்கள் தங்களின் பெற்றோர்களுடன் கலந்து கொண்டு பணி நியமன ஆணையை பெற்றுக்கொண்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

Our Recruiters







## Theni Melapettai Hindu Nadargal Uravinmurai

**Mr.T.Rajamohan,** B.Sc., President, TMHNU.

**Mr.P.P.Ganesh,** B.Sc., Vice President, TMHNU.

**Mr.M.M.Anandavel,** M.B.A., General Secretary, TMHNU.

**Mr. M.Palaniappan** Treasurer, TMHNU.


## EDITORIAL BOARD

### Editor in Chief

Mr.A.Rajkumar, B.B.A.,
Secretary.

Mr.A.S.R.Maheshwaran, B.Sc.,
Secretary.

Er.S.Naveen Ram, B.E., MBA.,
Joint Secretary.

### Editor

Prof.Dr. C.Mathalai Sundaram, M.E., MBA., Ph.D., MISTE.,
Principal, NSCET.

Mr.N.Mathavan, M.E., MBA., MISTE., (Ph.D.,)
Vice Principal & Head Incharge /ECE , NSCET.

Dr.M.Sathya, M.Tech., MBA., Ph.D.,
Vice Principal & Head Incharge /IT, NSCET.

Dr.C.Karthikeyan, M.A., B.Ed., CELTA.,Ph.D.,
Placement Officer , NSCET.

### Associate Editors

Mr.R.Udhayakumar, M.E., MBA., (Ph.D.,)
Asst. Prof. - CSE / IQAC -Coordinator , NSCET.

Dr.R.Athilingam, M.E., Ph.D.,
Asso. Prof. - EEE / IQAC -Coordinator , NSCET.

Dr.N.David Mathan, M.Sc., Ph.D.,
Professor - Chemistry / IQAC -Coordinator , NSCET.

### Design

Mrs.S.Lalitha, D.I.T.,
Junior Assistant, Office.

Mr.P.Ponmanikandan, B.B.A.,
Junior Assistant, Office.

## TMHNU Executive Committee Members

Mr.P.M.P.Arulprakasam
Mr.A.S.G.Dharmarajan, B.A.,
Mr.K.Gnanaprakasam
Mr.G.N.Jawahar
Er.R.T.Jawahar, B.E.,
Mr.A.S.Jeevagan
Mr.K.K.Jeyaram Nadar
Mr.P.Kannayiram, Ex.Mc.,
Mr.K.K.Sekar
Mr.B.Ramachandran, M.B.A.,
Mr.G.K.Vijayakumar, B.Com.,

## NSCET College Committee Members

Mr. K. Anburaj, (DCT)
Er. K. Ganesapandian, B.E.,
Mr. K. Jayamanikandan, ITI.,
Mr. R. Madasamy, M.C.A.,
Er. S.N. Mathalairajan, B.E.,M.B.A.,
Mr. V.K.M. Manivannan, M.B.A.,
Er. J.N. Rajamurugan, B.E.,
Mr. K. Rajkumar, M.Sc., (CS & IT)
Mr. A.R. Saravanakumar
Er. T.S. Saravanan, B.E.,
Er. N. Selvakumar, B.E.,
Mr. P.S.P.K.P. Sermaraja, B.A.,
Er. K.A.S.T. Sivagaminathan, B.E.,
Er. A.S.S. Somasundaram, B.E.,
Mr. T.A.T.M. Venkateswaran, B.Sc.,



NADAR SARASWATHI COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
VADAPUDUPATTI, THENI - 625531.
CONTACT : 04546 -263900, 901.


# NSCET COMMUNIQU'E


Vol : IX Issue : 2 April - September 2023
(Bi-Annual Issue of Nadar Saraswathi College of Engineering & Technology)


Nadar Saraswathi College of Engineering & Technology

### கல்லூரியின் செயலாளர்கள்



திரு.A.ராஜ்குமார்,B.B.A.,



திரு.A.S.R.மகேஸ்வரன்,B.Sc.,

### கல்லூரியின் இணைச்செயலாளர்



Er.S.நவீன் ராம், B.E., MBA.,

**Communique** நமது கல்லூரியின் ஒட்டு மொத்த சாதனைகளையும் எளிதாக தெரிந்து கொள்ள பயன்படும் ஓர் தொகுப்பு களஞ்சியமாகும். தரமான நிர்வாகம், தரமான ஆசிரியர் பெருமக்களின் தரமான சேவை மனப்பான்மையே எமது கல்லூரியின் வெற்றிக்கு அடித்தளம். பெயரளவில் ஆயிரம் சொல்லலாம் ஆனால் செயல் அளவில் அந்த ஆயிரமும் நிகழ வேண்டும் என்பதையே எமது நோக்கமாக கொண்டுள்ளோம். அனைவரின் கூட்டு முயற்சியால் நம் கல்லூரி மேலோங்கி செல்வது பெருமகிழ்ச்சியளிக்கிறது.

### கல்லூரியின் முதல்வர்



Dr.C.மதலை சுந்தரம், M.E., MBA.,MISTE., Ph.D.,

மாணவர்கள் அவர்களுக்கென ஏதாவது ஒரு தனித்திறமை பெற்றிருப்பர். அத்திறனால் அவர்கள் அடையப்போகும் உச்சம் அளவிற்குட்பட்டது அல்ல. அத்திறன் என்ன என்பதை அறிந்து அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளித்தால் அவர்கள் மென்மேலும் உச்சம் பெறுவர் என்பதில் கவனம் கொண்டு செயல்பட்டு கொண்டிருக்கிறோம்! வெற்றி காண்கிறோம் ! என்பதில் மகிழ்ச்சி!

## ஒன்பது ஆண்டுகளாக மாவட்ட அளவில் முதலிடம்

அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்ட தேர்ச்சி தரவரிசைப் பட்டியலில் நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி நவம்பர்/டிசம்பர் - 2022 ல் மாநில அளவில் 49 வது இடத்தையும் தொடர்ச்சியாக தேனி மாவட்ட அளவில் முதலிடத்தையும் பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



## **Signout Day (2019-2023 Batch)**

தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களுக்கு பிரிவு உபச்சார விழா (Sign Out Day) 13.05.2023 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் இறுதியாண்டு மாணவ, மாணவிகள் கல்லூரியில் பயின்ற காலங்களில் பெற்ற கல்வி அறிவு, மாணவர்களின் வளர்ச்சிக்கு பேராசிரியர்களின் அனுகுமுறைகள் மற்றும் கல்லூரியின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும் வருங்காலத்தில் தாங்கள் பயின்ற கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்போம் என்று தெரிவித்தனர். மாணவர்களுக்கு கல்லூரியின் முன்னாள் மாணவர்களின் கூட்டமைப்பிற்கான உறுப்பினர் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது. அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மாணவர்களுக்கு தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.







## **Pooled Campus Drive**

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தென் மண்டல அளவில் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் (Pooled Campus Drive) 15.06.2023 அன்று நடைபெற்றது. இவ் வேலைவாய்ப்பு முகாமில் Philips Domestic Appliances India Ltd., நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு அலுவலர்கள் திரு.ராமலிங்கம், திரு. அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டு Technical Test மற்றும் HR Round என இரண்டு சுற்றுகளாக நடைபெற்ற தேர்வில் 40 மாணவர்களை தேர்ந்தெடுத்தனர். இம்மாணவர்களின் பணி நியமன ஆணையை கல்லூரியின் செயலாளர்கள் திரு.A.ராஜ்குமார், திரு.A.S.R.மகேஸ்வரன் இணைச்செயலாளர் திரு.S.நவீன்ராம் மற்றும் கல்லூரியின் முதல்வர் டாக்டர்.C.மதளைசுந்தரம் ஆகியோர் வழங்கி பாராட்டினார்கள்.






## **Guest Lecture**

Guest Lecture program organized by Department of Science and Humanities & English Literary Club on "Communication Skills : A Practical Approach" on 10.06.2023. **Dr.R.Saktheswari,** Assistant Professor, The Research Center of English, Fathima College (Autonomous), Madurai was the chief guest of this function.



## **Theme of the Year 2023-2024**

· With a mission to improve the standards of students the current Academic Year 2023 – 2024 has named as **"Year of Integrity".**




## **பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி**

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு குழு **(Prevention of sexual Harassment Cell (PoSH))** மற்றும் பணியிடத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி 25.04.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்தின் போக்சோ குழு வழக்கறிஞர் திருமதி.ஆ.சசிகலா செந்தில் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சமுதாயத்தில் பெண்கள், முதியோர் ஆகியோருக்கான பாதுகாப்பு சட்டங்கள் பற்றியும், பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை கையாளும் விதம், பள்ளி மற்றும் கல்லூரி பருவங்களில் ஏற்படும் மாறுதல்கள், ஊடகத்தினால் ஏற்படும் தாக்கத்தினை எவ்வாறு கையாளுதல் மற்றும் பெண் குழந்தைகளுக்கான பாலியல் வன்கொடுமை, குடும்ப வன்முறை, பற்றியும், குழந்தை திருமணம், குழந்தைகளுக்கு எதிரான பாலியியல் வன்கொடுமை பற்றிய புகார்களுக்கு 1098 மற்றும் தேசிய பெண்கள் பாதுகாப்ப புகார் எண் 181, அனைத்துவிதமான புகார்களுக்கு உதவி எண் 100 தொடர்பு கொண்டு புகார்களை அளிக்கலாம் என்று மாணவ மாணவிகளிடையே எடுத்துரைத்து வழிப்புணர்வை ஏற்படுத்தினார்.








## **Guest Lecture**

Guest Lecture program organized by Department of EEE & Electroblitz Association on "Energy Conservation with Electrical Safety" on 19.04.2023. **Er.C.Maranmani, Executive Engineer / D**istribution(Rtd.,) TNEB, Periyakulam, Theni District was the chief guest of this function.

## **சர்வதேச யோகா தினம் - 2023**

நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 20.06.2023 அன்று சர்வதேச யோகா தினம் சிறப்பாக நடைபெற்றது. இதில் தேனி அறிவுத்திருக்கோவில், மனவளக்கலை மன்றத்தின் பேராசிரியர் திருமதி.அண்ணாமலைத்தாய் மற்றும் துணைப்பேராசிரியர் திருமதி.ரேணுகாதேவி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு யோகா செயல்முறை பயிற்சி மற்றும் அதன் நன்மைகள் குறித்து சிறப்பாக உரையாற்றி மாணவர்களுக்கு செயல்முறை விளக்கமும் அளித்தார்கள்.



## Students Achievements

### மாநில அளவில் முதலிடம்

மதுரை காமாராஜ் பல்கலைக்கழகம் - EDII BUB மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து நடத்திய தமிழ்நாடு மாணவர் கண்டுபிடிப்பாளர் 2022 (TNSI) மாநில அளவிலான போட்டியில் நமது கல்லூரியின் இறுதியாண்டு மெக்கானிக்கால் இன்ஜினியரிங் துறையைச் சேர்ந்த மாணவன் உதயா மாநில அளவில் முதல்பரிசு பெற்றுள்ளார் இவருக்கான பரிசுத்தொகை 1,00,000/- (ஒரு லட்சம் ரூபாயை) நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கரங்களால், மதிப்பிற்குரிய தமிழ்நாடு EDII TN அமைச்சர், EDII TN இயக்குநர் மற்றும் EDII TN அதிகாரிகள் முன்னிலையில் கிராண்ட் டெமோ தினவிழாவில் வழங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



**V.Uthaya**
IV - Year - MECH

### மாநில அளவில் இரண்டாமிடம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி கணினி அறிவியல் துறையைச் சார்ந்த நான்காம் ஆண்டு மாணவி S.பவித்ரா இரண்டாம் இடம் பெற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் 23.08.2023 அன்று சென்னையில் நடந்த விழாவில் ரூ.10,000 ரொக்கப்பரிசு பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.





**S.Bavithra**
IV - Year - CSE

### Quantathon 1.0

சென்னை SRM கல்லூரி நடத்திய Quantathon 1.0 என்ற போட்டியில் எங்கள் கல்லூரியின் கணினி அறிவியல் துறையைச் சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவர் மாதவன், மூன்றாம்ஆண்டு மாணவர்கள் முகிலன் மற்றும் டென்ஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு விருது மற்றும் ரூ.1000 ரொக்கப்பரிசு பெற்றனர்.







### Sports Corner






#### முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2023

தேனி மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2023 **SDAT** மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பெண்கள் கூடைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடம், ஆண்கள் கூடைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடம், பெண்கள் இறகுப்பந்தாட்டப் போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் மூன்றாமிடம் பெற்றுள்ளார்கள். இப்போட்டிக்கு சிறப்பு விருந்தனராக ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பஞ்சாயத்து அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ், மெடல், ரொக்கப்பரிசு மற்றும் பரிசுக்கோப்பையை வழங்கினார்கள்



### காமராஜர் பிறந்த தின கல்வித்திருவிழா - 2023

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை மற்றும் நாடார் சரசுவதி கல்வி நிறுவனங்களின் சார்பாக பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்களின் 121வது பிறந்த நாள் விழா மற்றும் கல்வித்திருவிழா 14.07.2023 & 15.07.2023 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இவ்விழாவினை முன்னிட்டு மினிமாரத்தான் ஓட்டம், இரத்ததான முகாம், ஊர்வலம், அலங்கார ஊர்தி அணிவகுப்பு, பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இடையேயான மாநில அளவிலான கட்டுரை, கவிதை, ஓவியம் ஆகிய போட்டிகள் நடைபெற்றது. இரத்ததான முகாமை தேனி மாவட்ட கலெக்டர் திருமதி.ஷஜீவனா மற்றும் மினி மாரத்தானை தேனி மாவட்ட காவல்த்துறை கண்காணிப்பாளர் திரு.டோங்கரோ பீரவீன் உமேஷ் ஆகியோர் சிறப்பாக துவக்கி வைத்தனர். கல்வித்திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு உறவின்முறை பெரியோர்கள் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்கள். மேலும் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.













### 77வது சுதந்திர தின விழா

நம் இந்திய திருநாட்டின் 77வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நமது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் திரு.G.K.விஜயகுமார் அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி, கல்லூரியின் **Theme of the Year** “ Year of Integrity” - ஐ வெளியிட்டு சிறப்புரையாற்றினார். மேலும் கல்லூரியின் செயலாளர்கள் திரு.A.ராஜ்குமார், திரு.A.S.R.மகேஸ்வரன் மற்றும் இணைச்செயலாளர் திரு.S.நவீன் ராம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சுதந்திரதின வாழ்த்துக்களை கூறினார்கள். மேலும் மாணவ, மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.









### Faculty Corner

* **Dr.C.Mathalai Sundaram,** Principal/NSCET, acted as a Chief Guest on “Freshers Day - Inaugural Function” organized by Goverment Polytechnic College, Kottur on 03.07.2023.
* **Mr.L.S.Vignesh,** Head Incharge /AI &DS, NSCET, acted as a Resource Person on “Workshop on GIT-HUB Repository”, organized by Nadar Saraswathi College of Arts & Science on 10.07.2023.
* **Dr.N.David Mathan,** Professor, Department of Chemistry has published a book entitled "Engineering Chemistry" from Charulatha Publications, Chennai with ISBN-13: 978-93-5577-811-6, in the month of August 2023.

# சந்திராயன் 3 வெற்றி விழா

சந்திரயான் - 3 விண்கலம் விக்ரம் லேண்டரை நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறக்கி விண்வெளி வரலாற்றில் உலக சாதனை படைத்த ISRO விஞ்ஞானிகளை போற்றும் விதமாக 24-08-2023 காலை 11:00 மணி அளவில் நமது தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை அலுவலகம் முன்பாக ISRO விஞ்ஞானிகளுக்கு பாராட்டுவிழாவை நமது உறவின்முறை பெரியோர்கள் சிறப்பாக நடத்தினர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தேனி மாவட்ட துணைக்கண்காணிப்பாளர் திரு.பார்த்திபன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு உறவின்முறை தலைவர் திரு.T.ராஜமோகன் அவர்கள் தலைமை தாங்கினார், உப தலைவர் திரு.P.P கணேஷ், பொதுச்செயலாளர் திரு.M.M ஆனந்தவேல், பொருளாளர் திரு.M.பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மற்றும் நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி செயலாளர்கள், இணைச்செயலாளர், முதல்வர், துணைமுதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி வாழ்த்துக்களை பரிமாறி கொண்டார்கள்.











## Infosys நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

Infosys மைசூர் - Spring Board நிறுவனம் நமது கல்லூரியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அந்நிறுவனத்தின் Vice President திரு. பிரதீப் சிவகாமிநாதன், Infosys Spring Board Coordinators பிலிகிரி ரங்கா மற்றும் வாணி ஸ்ரீ முன்னிலையில் வழங்க முதல்வர் Dr.மதளை சுந்தரம், துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வானது Infosys மைசூர் வளாகத்தில் 17.05.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது.







# எழுமின் விருதுகள் - 2023

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் நியூஸ் 7 செய்திகள் இணைந்து “ எழுமின் விருதுகள் 2023”- ஐ 13.08.2023 அன்று நடத்தியது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் துறை அமைச்சர் மாண்புமிகு.இ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் தேனி மாவட்ட ஆட்சியர் திருமதி.ஷஜீவனா, தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.டோங்கரே பிரவீன் உமேஷ், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.சரவண குமார் மற்றும் நியூஸ் 7 , செய்தி ஆசிரியர் திரு. சரவணா ஆகியோர் தலைமை தாங்கினார். இவ்விழாவில் தேனி மாவட்டத்தின் சிறந்த கல்லூரிக்கான விருது நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிக்கும், தேனி மாவட்ட சிறந்த பள்ளிக்கான விருது தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளிக்கும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. தேனி மாவட்டத்தின் சிறந்த சமூக ஆர்வலர், மனிதநேயர், மருத்துவம், விளையாட்டு போன்ற துறைகளில் சிறந்து விளங்குபவர்களை தேர்வு செய்து விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கபட்டது.
















## பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா- கூடைபந்தாட்டப் போட்டி

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை நாடார் சரசுவதி கல்வி நிறுவனங்கள் சார்பாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 121-வது பிறந்தநாள் விழா மற்றும் கல்வித் திருவிழாவை முன்னிட்டு முதலாவது மாநில அளவிலான மாணவ, மாணவியர் கூடைப்பந்து விளையாட்டு போட்டி 10.07.2023 அன்று நடைபெற்றது. இம்மாநில அளவிலான கூடைப்பந்து விளையாட்டுப் போட்டிக்கு நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி மற்றும் விடுதியின் முன்னாள் மாணவர் மற்றும் பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு.I.P.செந்தில்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டியினை துவக்கி வைத்து சிறப்பித்தார். இப்போட்டியில் மாணவியர்கள் அணி பிரிவில் சேலம் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி 34:14 என்ற புள்ளிகளை பெற்று முதலிடத்தையும், தூத்துக்குடி ஹோலிகிராஸ் அணி இரண்டாமிடத்தையும் பெற்றது. மாணவர் அணி பிரிவில் தஞ்சாவூர் கமலா சுப்பிரமணி மேல்நிலைப்பள்ளி அணி 52:48 என்ற புள்ளிகளை பெற்று முதலிடத்தையும், தேனி நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடத்தையும் பெற்றது. இம்மாநில அளவிலான மாணவ, மாணவியர் கூடைப்பந்து விளையாட்டு போட்டியில் முதலிடத்தில் வெற்றி பெற்ற அணியினருக்கு மதுரை, தமிழ்நாடு உணவு தாணிய வியாபாரிகளின் அசோசியன் தலைவர் திரு.S.V.S.S. வேல்சங்கர் அவர்கள் கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி சிறப்பித்தார்.









# Department Activities

| S.No | Date | Event name | Department Name / Organizer | Resource Person/ Place of Visit |
|---|---|---|---|---|
| 1 | 19.04.2023 | Workshop on "Cyber Security" | Department of CSE & FIST Association | Mr.S.Harisuthan, Information Security Analyst, FIS, Pune, Maharastra, india |
| 2 | 21.04.2023 | Online Workshop on Primavera Software and Its Career Opportunities in Abroad | Department of Civil Engineering | Mr.G.Rajakumar, B.E., MBA., Planning Manager, Qatar Petroleum, Qatar. |
| 3 | 24.04.2023 | Workshop on PATENT WRITING | Department of MECH & MASS Association | Dr.B.Radha Krishnan Head Incharge, Dept of MECH. |
| 4 | 26.04.2023 to 27.04.2023 | Industrial Visit | Department of civil Engineering | M/S Sri Dhaksha Promoters - Appartment Building, Coimbatore. |
| 5 | 28.04.2023 | Seminar on "Blockchain Technology" | Department of CSE | Mr.R.Sudharsan Pillai, National Head, Live-Wire, Chennai. |
| 6 | 28.04.203 to 29.04.2023 | Industrial Visit | Department of EEE | Kundha Power Plant, Ooty. |
| 7 | 29.04.2023 to 30.04.2023 | Industrial Visit | Department of ECE | Luminous, Coimbatore. |
| 8 | 4.5.2023 to 5.05.2023 | Industrial Visit | Department of CSE | Infosys & Spectrum Infotech Solution, Mysore. |
| 9 | 06.05.2023 | International Conference on Advanced Material Science " ICAMS 2K23" | Department of Civil & MECH | Dr.Pradeep Kumar Krishnan Asst.Prof, Mechanical and Industrial Engg Dept., National Univesity of Science and Technology, (NUST), College of Engineering (COE), Muscat, Sultanate of Oman |
| 10 | 7.05.2023 to 8.05.2023 | Industrial Visit | Department of MECH | Kannan Thevan Tea Estate Factory, Munnar. |
| 11 | 8.5.2023 & 10.5.2023 | Industrial Visit | Department of S&H | ISRO - Mahendragiri |
| 12 | 10.05.2023 | International Conference on " ICNSCET 2K23" | Department of CSE, ECE & EEE | Dr.Akey Sungheetha Prof.Department of CSE, School of Electrical Engineering and Computing, Adama Science and Technology university, Adama, Ethiopia. |



# Cell Activities

| S.No | Date | Event name | Cell Name | Resource Persons/ Place of Visit |
|---|---|---|---|---|
| 1 | 14.04.2023 | Veerappa Ayyanar Kovil Temple "Free Butter MilK, Food Drive & Traffic Regulation" | National Service Scheme (NSS) | Mr.M.Palaniappan, Treasurer, TMHNU. |
| 2 | 15.04.2023 | Basic Outline on Structural Engineering Hydrocarbon Structures | Industry Institute Partnership Cell (IIPC) & Civil | Mr.G.Immanueal Fernandez, Senior Manager, Engineers India Ltd., |
| 3 | 26.04.2023 | Preparedness of NAAC Accreditation Work | IQAC | AAA College of Engg. & Technology, Sivakasi |
| 4 | 26.04.2023 | Various Schemes of Self Employment and Higher Education Opportunities for SC/ST Students Through TAHDCO | SC/ST Cell | Mrs. G.Sarala , District Manager, TAHDCO, Theni. |
| 5 | 28.04.2023 | Hydrogen Fuel Cells for Elecric Vehicle | Industry Institute Partnership Cell (IIPC) & MECH | Mr.P.Arjunraj, M.E., Director, Value Entech Private Limited, Hosur. |
| 6 | 06.05.2023 | Awareness Programme on " Importance of Mental Health" | Student Counselling Cell | Mr.P.Rajan, M.Sc., Applied Psychology, Dip.Mental Healthcare, PGDGC (Guidance & Counselling), Registered Professional Counselling Psychologist. |
| 7 | 10.05.2023 | Workshop on Entrepreneurship Development Program for outgoing Students " As Career Opportunity" | EDC & IIC | Mr.R.Ramachandran, Field Coordinator - EDII Hub, Madurai Kamaraj University, Madurai. |
| 8 | 13.05.2023 | Karuvelam Tree Removal Activity (Near Theni New Busstand) | National Service Scheme (NSS) | Dr.C.Mathalai Sundaram,M.E.,Ph.D Principal |
| 9 | 20.05.2023 | FDP on " Drafting Research Articles and Proposals" | Research and Development Cell & Dept of ECE | Dr.K.Sakthipandi, Professor, SRM TRP Engineering College, Tiruchirappalli |
| 10 | 06.06.2023 | World Environment Day | NSS, GEC & Dept of S&H | Mrs.A.Sharmini, District Assistant Conservator of Forests, Theni Mr.M.SenthilKumar, Mr.A.Anantha Prabhu, Forest Officers, Theni. |
| 11 | 30.06.2023 | Awareness Program on "Social Web Usage" | PoSH Cell & Dept.of S&H | Mr.A.Rajkumar, Secretary, NSCET. |
| 12 | 25.08.2023 | Standards Writing Competition | Bureau of Indian Standards (BIS) Club | Mr.M.Sivakumar, Standard Promotion Officer (SPO), Bureau of Indian Standards, Madurai Branch. |

## பனை விதை நடும் விழா







நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் **NSS, GEC, YRC, RRC** மற்றும் **TANGO Greenage** இணைந்து நடத்திய பனை மரம் குறித்த விழிப்புணர்வு மற்றும் பனை விதை நடும் விழா 03.08.2023 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் விருதுநகர் டான்கோ கீரின்ஏஜ் தலைமை அதிகாரி திரு.**J.S.**சிவனேஷ்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பனை மரம் பற்றிய பயன்பாடு அதனால் ஏற்படும் நன்மைகள், பனை மர வளர்ப்பினை எவ்வாறு மீட்டெடுத்தல், மற்றும் அதன் மூலம் நிலத்தடி நீரை பாதுகாக்கும் முறைகள், பனை மரம் சார்ந்த தொழில்கள் தொடங்குதல், சுற்றுச்சூழலை காக்கும் பனை பயன்பாட்டு பொருட்களை பயன்படுத்தி நலத்தோடு வாழ்ந்திடவும் மாணவர்களிடையே பனை மரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேலும் கல்லூரி வளாகத்தில் 2000 பனை விதைகள் நடப்பட்டன. இவ்விழாவில் விருதுநகர் காமராஜ் பொறியியல் கல்லூரியின் குழு உறுப்பினர் திரு.**S.T.J.**சந்தோஷ்குமார், **VVV** கல்லூரியின் துணைத்தலைவர் திருமதி.சிவபாலஈஸ்வரி, விருதுநகர் **DCE** டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் தலைமை அதிகாரி திரு.**T.**விஜயவேல் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அண்ணா பல்கலைக்கழக 17வது மண்டல அளவிலான பொறியியல் கல்லூரிகளுக்கான கூடைப்பந்து போட்டி

*தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் அண்ணா பல்கலைக்கழக 17வது மண்டல அளவில் மாணவியர்களுக்கான கூடைப்பந்து போட்டி 26.09.2023 அன்று நடைபெற்றது. இப்போட்டிக்கு தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் திரு.**T.**ராஜமோகன் அவர்கள் தலைமை தாங்கினார். உபதலைவர் திரு.**P.P.**கணேஷ்,பொதுச்செயலாளர் திரு.**M.M.**ஆனந்தவேல் பொருளாளர் திரு.**M.**பழனியப்பன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். விளையாட்டுத்துறைச் செயலாளர் திரு.**B.**ராமச்சந்திரன், கல்லூரியின் செயலாளர்கள் மற்றும் இணைச்செயலாளர் வாழ்த்துரை வழங்கினார்கள். இப்போட்டியில் திண்டுக்கல், கரூர், விருதுநகர், தேனி ஆகிய மாவட்டங்களில் உள்ள பொறியியல் கல்லூரிகள் பங்கு பெற்றன. இறுதி போட்டியில் நமது கல்லூரி இரண்டாம் இடத்தை பெற்றது. வெற்றி பெற்ற அணியினருக்கு கோப்பைகள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.*













## *Technical Symposium - 2023*








*நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 21.07.2023 அன்று S&H Department நடத்திய ஒருநாள் Technical Symposium சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பல்வேறு கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டு S&H Department நடத்திய போட்டிகளில் பங்கு பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிழ்கள் வழங்கப்பட்டன.*

## நான் முதல்வன்

நான் முதல்வன் திறன் மேம்பாட்டுத் தளம் என்பது தமிழக இளைஞர்களுக்கான மிகப்பெரிய தொழில்துறை தொடர்பான திறன் மேம்பாட்டு முயற்சியாகும். இந்த தளத்தின் மூலம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் பள்ளி மாணவர்கள் அனைத்து மாணவர்களுக்கும் தொழில்துறையினர் மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பயிற்சி கூட்டாளர்களால் மென் திறன்கள், மதிப்பு கூட்டப்பட்ட படிப்புகள் (Value Added Courses) மற்றும் திறன் அடிப்படையிலான படிப்புகள் (Skill Based Learning) மூலம் இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில் தேவைகளை பூர்த்தி செய்யும். நமது கல்லூரியில் அனைத்து ஆண்டு மாணவர்களுக்கும் அவர்களின் முக்கிய கிளைகளுக்கு தொடர்புடைய மேம்பட்ட படிப்புகளுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக நமது அனைத்து மாணவர்களுக்கும் மொத்தம் 29 படிப்புகள் கற்பிக்கப்பட்டுள்ளன. நமது ஆசிரிய உறுப்பினர்கள் பயிற்சி கூட்டாளர்களால் ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பயிற்சி பெறுகிறார்கள் மற்றும் எங்கள் ஆசிரிய உறுப்பினர்களால் பெறப்பட்ட அறிவின் உதவியுடன் அவர்கள் நமது மாணவர்களை விரைவாகக் கற்கவும் பாடங்களை வெற்றிகரமாக முடிக்கவும் வழிகாட்டுகிறார்கள்.










## *Guest Lecture*

*நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 08.09.2023 அன்று ECE Department நடத்திய ஒருநாள் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினர்களாக காமராஜ் பொறியியல் கல்லூரியின் ECE Department-யை சார்ந்த Professor and Head Dr.R.Suresh Babu & Assistant Professor(SG) Dr.T.Prathiba ஆகியோர் கலந்து கொண்டு "Digital Image Processing and Its Applications-Lucid Style" பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.*





# முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான துவக்க விழா

## 14th Fresher's Day




தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான Fresher's Day 20.09.2023 அன்று நடைபெற்றது. இறுதியாண்டு பயிலும் மாணவ, மாணவிகள் முதலாம் ஆண்டு மாணவர்ளுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கீர்தன்யா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு பொறியியல் மாணவர்கள் வளர்ச்சி ஒன்றையே நோக்கமாக கொண்டு செயல்பட வேண்டும் என்று சிறப்புரையாற்றினார். மேலும் கல்லூரி வளாகத்தில் 14 மரக்கன்றுகள் நடப்பட்டன.








## மாணவர்கள் நடத்திய ஆசிரியர் தின விழா

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 05.09.2023 அன்று மாணவர்கள் நடத்திய ஆசிரியர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் மாணவர்கள் ஆர்வத்துடன் ஒன்றாக இணைந்து ஆசிரியர்களுக்கு பரிசுகள் மற்றும் இனிப்புகள் வழங்கி தங்களது வாழ்த்துக்களை பேராசிரியர்களுக்குத் தெரிவித்தனர்.










## Guest Lecture

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 05.09.2023 அன்று EEE Department நடத்திய ஒருநாள் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மாணவ, மாணவிகளுக்கு எலக்ட்ரிக் பைக் பற்றிய விளக்கங்கள், தொழில்நுட்பம் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து வைக் பைக் நிறுவனத்தின் மேலாளர்கள் மாணவர்களிடையே உரையாற்றினார்கள்.








## Kalam Audition

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 22.09.2023 அன்று World Youth Federation என்ற அமைப்பு Dr.kalam Young Achievers Award -ற்கான Audition-ஐ நமது கல்லூரி வளாகத்தில் நடத்தியது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக World Youth Federation என்ற அமைப்பின் தலைவர் திரு.அரசு அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களிடையே உரையாற்றி மற்றும் மாணவர்களின் Project களை பார்வையிட்டார்.














## பொறியாளர் தினவிழா

தேனி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியாளர் தினவிழா 15.09.2023 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் TATA Consultancy Service (TCS) என்ற பன்னாட்டு நிறுவனத்தின் பொறியாளரும் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவி சௌமிதா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களிடையே வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு பிரிவு, கணிப்பொறி ஆகிய துறைகளில் பணிபுரிவதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவை வளர்த்து கொள்ளும் வழிமுறைகள், நேர்முகத் தேர்வில் மாணவர்கள் வெற்றி பெறுவதற்கு பயிலக்கூடிய டெக்னிக்கல் ஸ்கில், பன்னாட்டு நிறுவனங்களில் டெவலப்பர், டெஸ்டர் போன்ற பணிகளின் தன்மை குறித்து விளக்கினார்.



# WAVES 2023-24

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் *29.09.2023* அன்று **Waves 2023** கலைநிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறையின் தலைவர் திரு.**T.**ராஜமோகன் அவர்கள் தலைமை தாங்கினார். உபதலைவர் திரு.**P.P.**கணேஷ், பொதுச்செயலாளர் திரு.**M.M.**ஆனந்தவேல், பொருளாளர் திரு.**M.**பழனியப்பன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்த நமது உறவின்முறை பெரியோர்களுக்கு நினைவு பரிசுகளை நமது கல்லூரியின் செயலாளர்கள் திரு.**A.**ராஜ்குமார், திரு.**A.S.R.**மகேஸ்வரன் மற்றும் இணைச்செயலாளர் திரு.**S.**நவீன்ராம் ஆகியோர் வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாணவ, மாணவிகளுக்கு நடனம், பாட்டு, மெஹந்தி போடுதல், சிகை அலங்காரம், வீடியோ மேக்கிங், போட்டோகிராபி, மைம், ஓவியம், பூங்கொடுத்து செய்தல், சமையல் போட்டி மற்றும் பேஷன் ஷோ போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாணவ, மாணவிகள் அதிக ஆர்வத்துடன் பங்கு பெற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களும் மற்றும் அனைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கு பரிசுக்கோப்பையும் வழங்கப்பட்டது.

















# Product Expo & Science Day 2023-24

நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியல் மாணவர்களின் **Product Expo & Science Day 2023-24** விழா *23.09.2023* அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் மூத்த விஞ்ஞானி டாக்டர்.**R.S.**கண்ணு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொறியியல் மாணவர்கள் தங்களுடைய அறிவியல் கண்டுபிடிப்புகளை பதிவு செய்ய வேண்டுமென்றும், ராக்கெட் பரிசோதனைகள் பற்றியும், மங்கல்யான், ஆதித்யா, சந்திராயன் ஆகிய திட்டங்களின் சாரம்சங்கள் பற்றியும் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் துறைவாரியாக சிறப்பு விருந்தினர்கள் வரவழைக்கப்பட்டு மாணவர்களின் படைப்புகளில் சிறந்த படைப்புகளை தேர்வு செய்தனர். இக்கண்காட்சியில் கல்லூரியின் அனைத்துத் துறைகளிலிருந்தும் 154 அறிவியல் படைப்புகள் இடம் பெற்றன. ஒவ்வொரு துறைகளிலிருந்தும் சிறந்த 3 அறிவியல் கண்டுபிடிப்புகள் தேர்வு செய்யப்பட்டு ரொக்கப்பரிசாக ரூ.60,000 மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.













